DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.

Case No: **SC.No.54/2025**

Prosecution Witness **P.W.19**

| | |
|---|---|
| Name : **திரு.மூவேந்தன்** | Caste: |
| Father's Name :**திரு.** | Calling : |
| Village: | Religion : |
| Taluk : | Age: |

A5 எதிரி ஆஜரில்லை அவருக்காக மனுத்தாக்கள் செய்யப்பட்டது, மற்ற எதிரிகள் ஆஜர்

**நாள்: 07.04.2026**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது சின்னமனூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.09.2024-ம் தேதியன்று இரவு 21.00 மணிக்கு சங்கிலி ராஜா, வயது 35, த/பெ. கருப்பையா, சங்கராபுரம் பீட், தேவாரம் பிரிவு, உத்தமபாளையம் வனசரகம், தேனி வனக்கோட்டம் என்பவர் நிலையத்தில் நேரில் ஆஜராகி எழுத்துப்பூர்வமாக கொடுத்த புகாரினை பெற்ற சின்னமனூர் காவல் நிலைய குற்ற எண். 349/2024, சட்டப்பிரிவு 103(1) BNS பிரகாரம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, மேல்விசாரணைக்காக 05.09.2024 ம் தேதியன்று 22.15 மணிக்கு காவல் ஆய்வாளர் அவர்கள் வசம் ஒப்படைத்தேன். துரித தபால் அறிக்கை தயார் செய்து காவலர் மோகன் தாஸ் SSI மூலம் நீதித்துறை நடுவர் உத்தமபாளைம் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ. 43, ஆய்வாளர் இது சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. ஆய்வாளர் விசாரணையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து உடனே ஆய்வாளர் வசம் ஒப்படைத்த விபரத்தை குறிப்பிட்டுச் சொல்லவில்லை

என்றால் சரிதான். நீதிமன்றத்திற்கு யார் மூலம் அனுப்பப்பட்டது என்ற விவரமும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில், எத்தனை மணிக்கு நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை அனுப்பப்பட்ட விவரமும் நான் ஆய்வாளர் விசாரணையில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் குறித்து எனக்கு எப்படி தெரிய வந்தது என்றால் புகார்தாரர் புகார் கொடுத்ததன் அடிப்படையில் தெரிய வந்தது.

2. புகார் யாரால் எங்கு வைத்து எழுதப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகார் கொடுக்கும்போது வன அலுவலகத்திலிருந்து எத்தனை அதிகாரிகள் வந்திருந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றிய விபரங்கள் எனக்கு தெரியாது, அந்த புகாரில் எந்தவித சாட்சி கையெழுத்தும் இல்லை என்றால் சரிதான். புகாரில் பிரேதம் நாட்டுக் கருவேல மரத்தின் அடியில் இருந்ததாக குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. அந்தப் புகாரில் தனது உயர் அதிகாரியான பிரின்ஸ் டேனியல் சம்பவத்திற்கு முதல் நாள் அந்த இடத்தில் இரண்டு ஆண் நபரையும், ஒரு பெண் நபரையும் பார்த்ததாக சொன்னதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த நபர்கள் வண்டி வைத்திருந்ததாகவோ, அந்த வண்டியின் எண் குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான். பிரேதம் இருந்த இடத்திற்கு ஒரு கத்தி இருந்ததாகவும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான் எதன் அடிப்படையில் 05.09.2024–ஆம் தேதியன்று சம்பவம் 20.00 மணிக்கு நடந்ததாக முடிவு செய்தோமென்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஏதாவது ஒரு கண்ணுற்ற சாட்சி சம்பவத்தை இத்தனை மணிக்கு பார்த்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

4. புகாரில் கத்திக்குத்து காயம் இருப்பதாக குறிப்பிட்டதன் அடிப்படையில் அது கொலை வழக்கு என்று வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. புகாரில் கத்திக்குத்து காயம் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரியல்ல, குத்து காயங்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. ஒரு நபர் குத்துக்காயத்துடன் காட்டுப் பகுதியில் கிடக்கும் பட்சத்தில் அவர் எந்தவிதமான ஆயுதத்தால்

தாக்கப்பட்டார் என்ற விபரமோ, வனவிலங்குகளால் தாக்கப்பட்டார் என்ற விவரமோ தெரியாதபோது அறுதியிட்டு இது கொலை வழக்கு என்று சொல்ல முடியாது என்றால் சரியல்ல.

5. கண்ணுற்ற சாட்சிகள் இல்லாத பட்சத்தில் ஒரு வனத்திற்குள் ஒரு பிரேதம் காயங்களுடன் இருக்கும் பட்சத்தில் சந்தேக மரணம் என்றுதான் வழக்கு பதிவு செய்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. புகாரி பிரேதம் எந்த திசையை நோக்கி இருந்தது என்ற விவரமும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். உயர் அதிகாரியின் தகவலின் அடிப்படையில் புகார்தாரர் புகார் கொடுத்ததாக சொல்வது உண்மையாக இருக்கும் பட்சத்தில் அடையாளம் தெரிந்த இரண்டு ஆண் மற்றும் ஒரு பெண் நபர் இருந்ததாகத்தான் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டிருப்பார் என்றால் சரியல்ல. அவ்வாறு குறிப்பிட்டு சொல்லியிருந்தால் அந்த எதிரியை உடனே கைது செய்திருப்போம் என்றால் சரியல்ல.

6. தனது மேலதிகாரியின் போன் நம்பர் எதையும் புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் வன அலுவலர்களுக்கான அடையாள அட்டையோ, அவரது அலுவலக முத்திரையோ பெறவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் வரிசை எண்.5–ல் குற்ற நிகழ்வு இடம் என்பது பிரேதம் நாட்டு கருவேல மரத்திற்கு அருகில் இருந்ததாக வாசகம் இல்லை என்றால் சரிதான். அந்தப் பிரேதம் புகார் கொடுப்பதற்கு முன்பு யாரால் பாதுகாக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி விவரம் எனக்கு தெரியாது.

7. எங்கள் காவல் நிலையத்தில் பிரேதம் இருப்பது தொடர்பாக புகார் கொடுக்கப்படும் பட்சத்தில் மேலதிகாரிக்கு இது சம்பந்தமாக தகவல் கொடுத்துவிட்டு பிரேதத்தை பாதுகாப்பதற்கு இரண்டு காவலர்களை அனுப்பி இருப்பேன் என்றால் சரியல்ல. அவ்வாறு அனுப்பியிருந்தால் அந்தக் காவலரின் விபரங்களையும் பதிவேட்டில் குறிப்பிட்டு நான் பதிவு செய்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்திற்கு சென்றேன். அது குச்சனூர் – போடி வரை

செல்லும் தார் சாலை என்றால் சரிதான். அங்கு அதிக வண்டி போக்குவரத்து உள்ள பகுதி என்றால் சரியல்ல, அவ்வளவாக வண்டி போக்குவரத்து கிடையாது.

8. எப்போதாவது ஒருமுறை அங்கு அந்த பகுதி வழியாக வண்டிகள் செல்லும். குச்சனூர் – போடி வரை செல்லும் பாதை என்பதால் அங்கு குறுக்குப் பாதை, ஸ்பீடு பிரேக்கர் கிடையாது என்பதால் அதிக வண்டி போக்குவரத்து இருக்கும் என்றால் சரியல்ல.சம்பவ இடத்திற்கு பக்கத்தில் நகராட்சி குடிநீர் தொட்டி உள்ளது என்றும், இரவு பகலாக அந்த குடிநீர் தொட்டி இயக்குவதற்கு நகராட்சி ஊழியர்கள் வருவார்கள் என்றால் சரியல்ல. அது பற்றி எனக்கு தெரியுமா, தெரியாதா என்றால் எனக்குத் தெரியும். அங்கு தொட்டி கிடையாது நான் வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றும், அங்கு குடிநீர் தொட்டி உள்ளது என்றால் சரியல்ல.

9. அன்றைய தேதியில் அவர் பணியில் இருந்தார் என்பது தொடர்பான ஆவணங்கள் எதையும் புகார்தாரர் புகாரில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 21.00 மணிக்கு புகார் பெற்றதாக முதல் விசாரணை சொல்லிவிட்டு ஆய்வாளர் விசாரணையில் 21.30 மணிக்கு புகார் பெற்றதாக சொல்லி உள்ளேன் என்றும், அவ்வாறு இருக்கும் பட்சத்தில் உண்மையிலேயே புகார் பெறவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் என்னை என்றைக்கு விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றால், அரை மணி நேரம் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

10. அதன் பிறகு ஆய்வாளர் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான். 25.09.2024ம் தேதியன்று ஆய்வாளர் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை நான் கையெழுத்திட்ட தேதி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, தேதி குறிப்பிட்டுள்ளேன். 05.08.2024 என்று தான் ஒப்பம் தேதி குறிப்பிட்டப்பட்டுள்ளதென்றால் சரிதான்.

11. சம்பவத்திற்கு முன்பே தயாரிக்கப்பட்ட ஒரு போலி முதல் தகவல் அறிக்கைக்கு நான் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. ஆய்வாளர்

புலன் விசாரணைக்கு நான் உதவியாக இல்லை என்றால் சரிதான். ஆய்வாளர் விசாரணையில் இந்த வழக்கின் பொருண்மையைப் பற்றி நான் விவரித்து சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி, சொன்ன இடத்தில் எந்த முதல் தகவல் அறிக்கையும் பதிவு செய்யவில்லை என்றும், ஆய்வாளர் புள்ளிவிவர கணக்குக்காக தயாரிக்கப்பட்ட அலுவலக ஆவணத்தில் கையெழுத்து போட்டு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

12. உண்மையிலேயே இந்த புகார் 24.09.2024 ஆம் தேதியன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டபோது அன்றைய தினமே கையெழுத்து போட்டு இருப்பேன் என்றால் சரியல்ல அதற்கு மாறாக 05.08.2024 தேதியன்று கையெழுத்திட்ட ஆவணத்தை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அன்றைய தினம் பணியில் இல்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. நான் புலன் விசாரணை ஆய்வாளருக்கு உதவியாக இருந்ததாக ஆய்வாளர் விசாரணையில் சொல்லி இருந்தால் அது தவறு.

<u>**மறுவிசாரணை – இல்லை**</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.04.07 18:03:41 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.